International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 01 January to March 2021 www.irjtsjournal.org

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சமண சமயச் சிந்தனைகள்

முனைவர் செ.ரவிசங்கர்
*உதவிப்பேராசிரியர்*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை-21*

**முன்னுரை:**

சமயம் இன்று அனைத்து நாடுகளிலும் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொள்கின்றன. இந்தியாவில் பல சமயங்கள் இருந்தாலும் இன்று இந்து, முஸ்லீம், கிறித்துவம் பெரும் பான்மையான மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தொடக்க காலங்களில் சமணம் பௌத்தம் போன்ற சமயங்கள் பெரும் செல்வாக்கைப் பெற்று இருந்துள்ளன. அந்த வகையில் தமிழ்

நாட்டில் 6ஆம் நூற்றாண்டில் களப்பிரர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் சமண சமயம் தமது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டிருந்தன. அந்தக் காலத்தில் உருவான இலக்கியங்களில் சமணத்தாரின் கொள்கைகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்த சமணர்கள் தமிழ் நாட்டில் பல ஆண்டுகள் சிறந்து விளங்கினர் என்பதை தமிழ்ச் சரித்திரம் பகுதியிலே இருண்ட காலம் என்று கூறப்படும் களப்பிரர் காலம் சமணம் ஓங்கித் திகழ்ந்த காலம் எனலாம். களப்பிரர் முதலில் பௌத்தராக இருந்து பின்னர் சமண சமயர்கள் ஆயினர் என்ப. இக்காலப் பகுதியை அடுத்துப் பல ஆண்டுகள் சமண சமயம் தலை சிறந்து விளங்கியது என்று சமணமும், தமிழும் குறிப்பிடுகிறது. அந்த வகையில் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த சமணம் தமது கொள்கைகளைத் தமிழ் இலக்கிய நூல்களில் வெளிப்படுத்தியுள்ளது அவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சமண சமயக் கொள்கைகளும் பிரிவும்:**

சமணத்தினர் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தனர். அதாவது,

1. **திகம்பரர்**
2. **சுவேதாம்பரர்**

என்பவர் ஆவார். இவர்களில் திகம்பரர் என்பவர் உடையணியாத நிர்வாணிகள். இம்முறையை மகாவீரரின் சீடர்கள் ஏற்றனர். சுவேதாம்பரர் என்பவர் இதனின் மாறுபட்டவர், அவர்களது கொள்கை வெள்ளாடை உடுத்திக்கொள்வது. ஆனால் பொதுவாகச் சமணப் பெரியவர்களுடைய கருத்து

நிர்வாணமூர்த்தி எய்துவதற்கு ஆடையின்மை இன்றியமையாதது ஆகும். என்பதாக உள்ளது.

சமணர்களின் கொள்கை யாவது பிற உயிர்களுக்குத் துன்பம் இழையார், எல்லா உயிர்களிடத்தும் அருள் காட்டுவது கொல்லமையை விரதமாகக் கொள்வது, புலால் உண்ணர், தீயன பயக்கும் பொய்வழங்கார், பிறர் பொருளைக் கவராமை, மகளிர் போகத்தை விரும்பார், ஆசையற்றவன்,

சினம் கொள்ளுதலை விடுத்தல், கடுஞ்சொற்களைக் கூறாமல் இருப்பது, இசை நாடகங்களை விரும்பார். இன்பம், துன்பம், நன்மை, தீமை, தண்மை, வெம்மை, ஒரு செம்பொன் இவற்றைச் சமமாகக் கருதுவது, மேலும் மயிர்களைதல், ஆடையின்றித்

திரிதல், நீராடாமை, பஞ்சணை முதலியன நீக்கித் தரையில் படுத்துறங்குதல், நின்று உண்ணுதல், ஒரே வேளை புசித்தல், இவை தவிர சமணத்தில் இருக்கும் இல்லறத்தார்கள் கொல்லுதல் கூடாது, திருடுதல் கூடாது, பொய் சொல்லுதல் கூடாது பிறர் மனை நயத்தல் கூடாது, கள், ஊண் முதலியவற்றை பருகுதல் கூடாது, கதிரவன் மறைந்த பின்பு உண்ணுதல் கூடாது, இவையெல்லாம் சமணர்களின் திடமான

கொள்கையாகும்.

**சமணர்களும் தமிழ்ப் பணியும்:**

சமணர்கள் தமிழில் அற இலக்கியங்களான பதினெண் கீழ்க்கணக்கை வழங்கினர் அவர்கள் அறக்கருத்தை எளிதாகத் தமிழில் புகுத்த முடியவில்லை என்பதைத் 'தென்னாடு போந்த சமணர் எளிதில் தமது சமயக்கொள்கைகளைத் தமிழ் நாட்டில் புகுத்தக் கூடவில்லை அவர்கள்வட மொழியில் வல்லுநர், அம்மொழிப் புலமை மாத்திரம் இருப்பின், தமிழ் நாட்டில் தாம் மேற்கொண்ட சமயப்பணிக்கு அமையாது என்று கண்டு, தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தனர். மற்றும் சமாதான முறையிலேயே தமது கொள்கைகளைச் சிறது சிறிதாகப் புகுத்த எண்ணினார். பிராமணர்களுக்கு நேர் விரோதிகளான தமிழ் மக்களுடன் கூடித் தமிழை வளர்க்கத் தொடங்கினர் வடநாட்டிற் வழங்கிய ஆரியக் கொள்கைகள் பல தமிழ் நாட்டிற் பரவின. சமண சமய நீதிகளும் கோட்பாடுகளும் தமிழ்ப் பனுவல்களில் இடங்கொண்டன. அதற்கு முன் தமிழ் நாட்டில் வேலன் வெறியாட்டும், குறிகூறலும், மறியறுத்தலும், சில்லறை தேவதைகள் வழிபாடும் மிகுந்து நின்றன. சமணர்களின கொள்கையாலும் வருகையாலும் மாறுதல் ஏற்பட்டன. உலக நிலையாமை யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, வற்புறுத்தி மக்களைச்

சிறுகாலையே தமக்கு செல்வுழிவல்சி, இறுகிறுகத் தோட்கோட்புக் கொள்ளுமாறு நயம்பட உரைத்தனர். என்று வரதாஜ ஐயர் குறிப்பிடுகிறார். இக்கொள்கைகளும் வழிமுறைகளும் சமணர்களின் இலக்கியங்களில் நிரமபக் காணக் கிடக்கின்றன, குறிப்பாக அற இலக்கியங்களில் காணமுடிகின்றன.

**பதினெண் கீழ்க்கணக்கில் சமணக் கொள்கை:**

தமிழில் அற இலக்கியங்கள் என்று கூறப்படுகின்ற பதினெட்டு நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் சமணக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. இந்நூல்களில் அனைத்துக் கொள்கைகளும் அமைந்துள்ளன.

**வினையின் வலிமை:**

சமணர்களின் கொள்கைகளில் ஒன்று வினை அதாவது ஒருவன் செய்த வினையின் பயனை நுகர்ந்து கழித்தல் வேண்டும். அதன் படியினின்றும் யாவரே யாயினும் தப்ப முடியாது. ஊழ்வினை உரு எடுத்து வந்து செய்தவனை நுகரச் செய்யும் என்னும் சமணக் கொள்கையை நாலடியார் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

**"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தே தன்செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு."** 1

**(நாலடியார்-101)**

பழவினை என்னும் அதிகாரத்தில் 'ஆதிரைகள் பல உள்ள இடத்தில் இளங்கன்றை அவிழ்த்து விட்டாலும் அது தன் தாயைத் தேடிச் சென்று பால் குடிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது, அது போல முன் செய்த வினையும் தன்னைச் செய்த உரியவனைத் தேடிச் சென்று பெறுவதில் கன்றை யொத்த தன்மையுடையதேயாம்'. என்று கூறுகிறது நாலடியார். வினையின் வலிமையை சமணர்கள் நம்பிக்கையாகக் கொண்டவர்கள். எனவே தான் சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் வினையைப் பற்றி பதிவு செய்துள்ளனர். வினைக் கோட்பாட்டினைத் திருவள்ளுவரும் எடுத்து இயம்புகின்றது அதாவது

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான் முந் துறும்."** 2 (380)

என்கிறது 'ஊழைக் காட்டிலும் வலியது உண்டோ? எது தொடர்ந்தாலும் அது முந்தி விடும்' உரையெழுதிய வ.சுப. மாணிக்கனார். எனவே சமணர்கள் வினைக்கோட்டை முதன்மையானதாகக கருதியுள்ளனர்.

**சுபாவ வாதம்:**

சமண நெறிக்கு சுபாவ வாதம் என்ற பெயரும் உண்டு 'அதாவது பொருள்களின் இயல்பினை அறிந்து உணர்த்தியவர்கள் சமணர்கள்' பொருள்களின் இயல்பு மாறாது சுபாவம் கெடுவதில்லை என்பதை சமணர்கள் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே நாலடியாரில்

**"தக்காரும் தக்கவர் அல்லாரும் தம்நீரமை**
**எக்காலும் குன்றல் இலராவர் - அக்காரம்**
**யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாம்**
**தேவரே தின்னிமை வேம்பு"** 3 (112)

அதாவது 'தகுதி வாய்ந்தவரும், தகுதி இல்லா தவரும் தத்தமக்குரிய தன்மையிலிருந்து சிறினும் நீங்கமாட்டார். என்போல எனின் சக்கரையினை யாவர் உண்ணினும் அஃது இனிக்குமே தவிர தன்னியல்பின் மாறிக் கசக்காது. அங்ஙனமே, வேம்பினை மேலோராகிய தேவர்கள் சாப்பிட்டாலும் கசக்குமே தவிர தன்னியல்பில் மாறி இனிக்காது' என்று பொருளின் இயல்பினை உள்ளது உள்ளவாறு எடுத்துக் காட்டுகிறது இப்பாடல். இக்கொள்கைகளை சமணர்கள் தமது நெறியாகக் கொண்டிருந்துள்ளனர். எனவே இது போன்ற தன்மையிலான பாடல்களை நாலடியாரில் பதிவு செய்துள்ளனர்.

**இசை நாடகம் விரும்பாமை:**

சமணர்கள் இசை நாடகம் போன்றவற்றை விரும்பமாட்டாகள்

'சமணர்கள் மேனாட்டிற் பியூரிட்டன் என்ற வகுப்பினரைப் போன்று நாடக விரோதிகள், நாடகம் சிற்றின்ப உணர்ச்சியைப் பெருக்கும் என்பது அவரது கருத்து' என்று சமணர்கள் பற்றி ஆய்வாளர்கள் கூறுகினறனர். அது உண்மை என்பதனை 'ஏலாதி' யில் இடம் பெற்றுள்ள சமணக் கருத்துக்கள்

தெளிவுபடுத்துகின்றன. நிலையாமை குறித்து தமது நூல்களில் கருத்துரைக்கின்றனர். அதாவது இந்த உலகத்தில் பிறந்த உயிர்களெல்லாம் இறவாமல் இருப்பது இல்லை கெடாது நிலை பெற்று இருக்கும் வலிமைகளும் இல்லை; மூப்பு அடையாமல் நிலை பெற்று இருக்கும் இளமையும் இல்லை; குறையாத செல்வங்களும் இல்லை. என்று நான்மணிக் கடிகையில் சமணரின்

மேலானத் தத்துவம் இடம் பெற்றிருக்கிறது.

**“சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்**
**தாவாத இல்லை வலிகளும் - மூவாது**
**இளமை இசைந்தாகும் இல்லை - வளமையில்**
**கேடின்றிச் சென்றாகும் இல்.”** 4 (76)

இது போலவே நாலடியாரிலும் ‘செல்வம் மின்னல்போல் அழியுமாலைத்து என்றும் அறம் புரியாது அவமே குவிக்கப்படும் செல்வம், ஈக்கள் சேர்த்த தேன் பிறரால் கவரப்படும் என்றும், தீவளியால் கனி மட்டுமின்றிக் காய்களும் பூவும் உதிர்வன போன்று இலைகளும் இறப்புக்குள்ளாவதில்லை என்றும், புல்நுனி மேல் நீர்போல யாக்கை நிலையாமைத் தன்மையுடையது என்றும் கூறுகின்றது. இது போன்று பல இடங்களில் நிலையாமைக் கருத்து விரவி பரவியுள்ளது. சமணம் கருத்தாக நிலையாமையை உணர்ந்து நடப்பது சான்றோர்களது வழியாகும் என்பதாக அமைகின்றது. இது நிலையாமையான கருத்துக்களாக நூல் முழுவதும் காணமுடிகிறது.

**மயிர்களைதலும், ஆடைகளைதலும்:**

சமணத்தின் கொள்கையில் மயிர் களைந்துகொள்ளுதலும்,ஆடைகளைக் களைந்து கொள்ளுதலும் முக்கியமானதாகக் கருதப்பட்டன. ஆனால் ஆசாரக்கோவையில் மயிர்களைவது ஒழுக்கக் கேடு என்பதால் நீரோடுதல வேண்டும் என்கினற கருத்தினை

**”தேவர் வழிபாடு தீக்கனா வாராமை**
**உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது**
**வைகு வயிலோடு இணை விழைச்சுக் கீழ்மக்கள**
**மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்**
**பேயுறாது ஆடுக நீர்.”** 5 (10)

என்று கூறுகிறது இது முரண் பட்ட கருத்தாகத் தோன்றுகின்றது. அது போலவே ‘ஆடையின்றித் திரிதல்’ என்பதும் சமணத்தினரின் கொள்கையாகக் கருதப்படுகிறது. அப்போது ஆடைக்கு முக்கியத்துவம் சமணர்கள கொடுக்கவில்லை எனவும் அறிந்து கொள்ளப்படுகிறது, ஆனால் ஆசாரக் கோவையில் பழமையோர் கண்ட முறையைப் பற்றிக் குறிப்பிடும் பாடல்

**உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத்தி உண்ணார்**
**உடுத்தாடை நீருள் பிழியார் விழுத்தக்கார்**
**ஒன்றுடுத்து என்றும் அவைபுகார் என்பதே**
**முந்தையோர் கண்ட முறை** 6 (11)

என்று கூறுகிறது ‘சிறந்த சான்றோர் ஓர் ஆடையை உடுத்தலை நீராடமாட்டார்கள்; ஓராடை உடுத்து உண்ணமாட்டார்கள் தாம் உடுத்த ஆடையை நீரின்கண் பழியமாட்டார்கள். ஓராடை உடுத்து கற்றவர் அவைக்குச செல்ல மாட்டார்கள், இவையே நம்முன்னோர் கண்ட முறை’ என்று சமணத்தின கொள்கைக்கு மாறாக கருத்தினைக் கூறுகிறது ஆசாராக்கோவை. இது எல்லாம் மேலும் ஆராய்ச்சிக்குரியது.

**முடிவுரை:**

இக்கட்டுரை சமணத்தின் கொள்கைகளைக் கீழ்க்கணக்கு நூல்கள் கொண்டு ஆராய்ந்துள்ளது, ஆனால் சில

கொள்கைகள் நூல்கள் முழுவதிலும் காணப்படுகின்ற போதும், சில கொள்கைகள் முரண்பட்டவையாகத் தெரிகிறது, அதற்குக் காரணம் ‘கீழ்க்கணக்கில் அறநூல்கள் 9 ஆகும், அவற்றில் ‘நாலடியார், பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன நான்கும் சமணச் சான்றோரால் பாடப்பெற்றவை, எஞ்சிய 5ம் தமிழகத்திற் குரிய இறைநெறியாளர்கள் இயற்றப்பட்டவை, என்பது சோ.ந.கந்தசாமியின் கூற்றாகும். அது ஏற்புடையது போல நூல்களின் கருத்தினைப் பார்க்கும் போது தோன்றுகின்றது.

**அடிக்குறிப்புக்கள்:**

[1] நாலடியார், பாடல் எண்,101

[2] திருக்குறள், 380

[3] நாலடியார், பாடல் எண் 112

[4] நான்மணிக்கடிகை, பாடல் எண், 76

[5] ஆசாரக்கோவை, பாடல் எண், 10

[6] ஆசாரக்கோவை, பாடல் எண், 11